# தமிழ் நாடு

திங்களிதழ்

இதழ் - 14 | தமிழ்நாட்டு மக்களின் உரிமைக் குரல் | நன்கொடை : ரூ. 10


# கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை ஆர் எஸ் எஸ் க்குத் தாரைவார்க்கப்பட்டதா?

**விவேகானந்தர் பாறையைப் பார்த்துவிட்டுத்தான் திருவள்ளுவரைப் பார்க்க வேண்டுமா?**

## விவேகானந்தருக்கும் தமிழ்நாட்டிற்கும் என்ன தொடர்பு?

## வங்காளத்திலோ வேறு எந்த வடநாடுகளிலோ பொது இடத்தில் திருவள்ளுவருக்கு மண்டபம் எழுப்பி விட முடியுமா?

## தமிழ்நாட்டு முதலமைச்சர் மெத்தனமாக இருக்கக் கூடாது..

## கன்னியாகுமரி ஐயன் திருவள்ளுவர் சிலைக்குக் குமரிக் கடற்கரையிலிருந்து தனியே பாலம் அமைத்திட வேண்டும்..

ஐயன் திருவள்ளுவருக்குக் குமரி முனையில் 133 அடிகளில் கற்சிலையை தி.பி. 2030 சிலை 17 (கிபி 2000 சனவரி 1) ஆம் நாள் நிறுவியதன் வழி தமிழ்நாட்டிற்குப் பெருமையைத் தேடித்தந்தார்.. அன்றைய தமிழ்நாட்டு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள்.

அச்சிலையை நிறுவுவதற்கு எண்ணற்ற பாடுகள் பட வேண்டி இருந்தது.. என்பது தனி செய்தியானாலும் அதைத் தமிழ்நாட்டு அரசை நிறுவவிடாமல் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிடவேண்டும் என்பதற்கு ஆர்எஸ்எஸ் என்ன தகிடுதத்தங்கள் செய்தன என்பதை அறிந்தாக வேண்டும்..


ஆனால், தமிழ்நாடு அரசு திருவள்ளுவர் சிலையை நிறுவிய சில ஆண்டுகளுக்குப் பின்பு அது பொருட்படுத்தப்படாத நிலையில் கிடக்கிறது,

அது நிறுவப்பட்டிருக்கும் பாறைக்குச் செல்ல இன்றும் வழி மறுக்கப்பட்டு வருகிறது.. பூம்புகார் படகு போக்குவரத்துக் கழகம் பொறுப்பெடுத்து இருந்தாலும் அதையும் தன் கட்டுக்குள் கொண்டு வந்திருக்கிற நிலையில் ஆர் எஸ் எஸ் இன் பொறுப்பில் இயங்கும் விவேகானந்தர் கேந்திரம் திருவள்ளுவர் சிலைக்குப் படகு போய் வருவதைத் தடை செய்திருக்கிறது.. கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலான இத்தகைய திமிர் பிடித்த ஆர்எஸ்எஸ் இன் செயல்களைக் கண்டு தமிழ் ஆர்வலர்களும் அறிஞர்களும் வெகு மக்களும் பெருமளவில் மன வருந்தவே செய்கின்றனர்..

திருவள்ளுவர் சிலையின் முதன்மையைக் குறைப்பதற்காக எண்ணற்ற சூழ்ச்சிகள் நடந்து வருகின்றன.

தமிழ்நாட்டின் தேசிய அடையாளமாகக் குமரி முனையில் நிறுவப்பட்டிருக்கும் ஐயன் திருவள்ளுவரின் சிலை தமிழ்நாட்டின் முதன்மை மதிப்புக்குரியதாக அமைக்கப்பட வேண்டும் என ஆர்வலர்கள் அனைவரும் கருதுகிறோம்..

இதற்கிடையில், விவேகானந்தர் மண்டபம் உள்ள பாறையில் இருந்து திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டிருக்கிற பாறை வரை 97 மாத்திரி(மீட்டர்) தொலைவுக்கு 4 மாத்திரி(மீட்டர்) அகலத்திற்கு 37 கோடி உருபாய் செலவில் ஓராண்டிற்குள் ஒரு கண்ணாடி பாலத்தை அமைப்பதாகத் தமிழ்நாடு அரசு அறிவித்திருக்கிறது..அதற்காக அடிக்கல்லும் நாட்டியிருக்கிறது..



அவ்வாறு செய்தது மிகவும் கேடானது மட்டுமின்றி.. திருவள்ளுவர் சிலையையே ஆர் எஸ் எஸ் நிறுவனமான விவேகானந்தர் கேந்திரத்திடம் தாரை வார்க்கிற செயல்பாடாகவே அமைந்திடும்..

திருவள்ளுவர் சிலைக்குப் போக வேண்டும் என்றால் விவேகானந்தர் மண்டபத்திற்குப் போய்விட்டுத்தான் வர வேண்டும் என்கிற கட்டாயத்தை ஏற்படுத்துவதாக இருக்கிறது..

அப்படியான நிலையில் பெரும்பான்மையானவர்கள் திருவள்ளுவர் சிலைக்குப் போவதையே தவிர்க்கும் சூழல் ஏற்படும் என்பதோடு மட்டுமன்றி, ஏதோ விவேகானந்தர்தான் முதன்மையானவர் போல அடையாளப்படுத்தித் திருவள்ளுவரைத் தாழ்த்துகிற நிலையே உருவாக்கப்படுகிறது..

எனவே, பத்தோடு பதினொன்றாக திருவள்ளுவர் சிலையைப் போகிற போக்கில் பார்க்கிறபடியான நிலையை விடுத்துத் தனியே ஐயன் திருவள்ளுவர் சிலைக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் குமரிக் கடற்கரைப் பகுதியில் இருந்து திருவள்ளுவர் சிலைக்குப் போவதற்குத் தனியே ஒரு பாலம் அமைத்திட வேண்டுமென்று அனைவரும் வலியுறுத்துகிறோம்..

கடற்கரையில் இருந்து திருவள்ளுவர் சிலைக்கு அமைக்கப்படுகிற பாலத்தை உலகின் சிறப்புக்குரிய பாலமாக அமைத்துவிட்டால் இன்னும் மிக சிறப்பான ஈர்ப்பைத் திருவள்ளுவர் சிலைக்கு தர இயலும்..

அப்பாலத்தில் நடந்து செல்வதே சுற்றுலாத் தன்மைக்கும் சிறப்புத் தரும் வகையில் சிறப்பானதொரு பாலத்தை அமைப்பதுடன்.. கட்டணம் கூடத் தமிழ்நாடு அரசே பெற்றுக் கொள்ளுகிறபடி அமைக்கலாம்..

தமிழ்நாட்டிற்கு வெளியே இருந்து வருகிற அனைவருக்கும் திருக்குறளைப் பற்றியும் திருவள்ளுவரைப் பற்றியும் தமிழ் மொழியின் சிறப்புகள் பற்றியும் எடுத்து இயம்புகிற வகையில் திருவள்ளுவர் சிலைக்கு அடியில் உள்ள மண்டபத்தில் காட்சிப் பொருளாகவும் கையேடுகளாகவும் விற்பனை அடிப்படையில் ஏற்பாடுகளை அமைத்தாக வேண்டும்..

தமிழ் மொழி தமிழ் இனத்தின் மீது அக்கறையற்ற பிறர் எவரும் செய்ய முனையாத மேற்படிச் செயல்திட்டத்தைத் தமிழ்நாடு அரசு உடனே செய்திட வேண்டும்.. திருவள்ளுவரின் தமிழியச் சிறப்புகளை ஆர் எஸ் எஸ் கவர்ந்து கொண்டு களவாடுவதற்கு வழி அமைத்திடாத வகையில் விரைந்து செயல்பட வேண்டும் என்று தமிழ் அறிஞர்கள் தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் முறையீடு செய்கிறோம்..




திருக்குறள் பேரவைய ஒருங்கிணைப்பில் நூற்றுக்கும் மேற்பட்டோர் சென்னை ஆட்சியர் அலுவலகம் முன்பு கடந்த மே 9 ஆம் நாள் கூடிடப் பெருந்திரள் முறையீட்டு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.. தமிழறிஞர்கள், திருக்குறள் ஆர்வளர்கள் பலர் கலந்துகொண்டனர்.



திருவள்ளுவர் மன்றங்கள், பெரியாரியச் செயல்பாட்டாளர்கள், திருக்குறள் இயக்கத்தினர், தமிழிய உணர்வாளர்கள் சார்பான கூட்டறிக்கை

திருவள்ளுவர் மன்றங்கள், பெரியாரியச் செயல்பாட்டாளர்கள், திருக்குறள் இயக்கத்தினர், தமிழிய உணர்வாளர்கள் சார்பான கூட்டறிக்கை

0 கலைஞரின் நீண்டநாள் கனவான கன்னியாகுமரி ஐயன் திருவள்ளுவர் சிலையின் சிறப்பைக் குறைக்கும் வகையில் ஆர் எஸ் எஸ் ( சார்பு ) இயக்கமான விவேகானந்தர் கேந்திராவுக்கு முதன்மை இடம் தந்து திராவிட மாடல் அரசு செயல்படக் கூடாது!

0 கன்னியாகுமரி ஐயன் திருவள்ளுவர் சிலைக்குக் கடற்கரையிலிருந்து தனியே பாலம் அமைத்திட வேண்டும்

0 விவேகானந்தர் மண்டபப் பாறைக்கும் திருவள்ளுவர் சிலையுள்ள பாறைக்கும் இடையிலான பாலம் அமைப்பதைத் தமிழ்நாடு அரசு தவிர்க்க வேண்டும்!

மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களுக்குத் திருக்குறள் நெறியர்கள் அனைவரும் இணைந்து இந்தக் கூட்டறிக்கையை அனுப்பப் பெற்றது.

# பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயா அவர்களின் 28 ஆம் நினைவேந்தல் நிகழ்ச்சி

*நாள்: தி பி 2054 விடை 28(சூன் 11, 2023)*
*ஞாயிற்றுக்கிழமை, மாலை 4 மணி முதல் 8 மணிவரை..*

*இடம் : பாவலரேறு தமிழ்க்களம் 1 வடக்குப்பட்டுச் சாலை, மேடவாக்கம் கூட்டுச் சாலை, மேடவாக்கம், சென்னை 600100*




நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு: **பாவலரேறு தமிழ்க்களம்**

தொடர்புக்கு: 9444440449, 9941492701, 9443810662, 8608068002.

**அனைவரும் வருக**

# கண்ணகிக் கோட்டக் கோயில் தமிழ்நாட்டிற்குச் சொந்தமாக்கப்படவேண்டும்

பன்னீர் பெருமாள்
தமிழ்ப்புலம்

சுருளி மலையில் உள்ள விண்ணேற்றிப் பாறையில் சேர மன்னன் இமயத்தில் இருந்து கல்லெடுத்து வந்து உருவாக்கிய கண்ணகி கோட்டத்தை ஆய்வாளர் கோவிந்தராசன் 1963□இல் கண்டுபிடித்தார். இன்று கண்ணகி கோட்டத்தில் கண்ணகி சிலையின் இடுப்புக்குக் கீழ் உள்ள பகுதி மட்டுமே இருக்கிறது. அந்தக் கண்ணகி கோட்டத்தை இன்று **மங்களதேவி கண்ணகி கோவில்** என்று மாற்றுகிற வேலை நடந்து கொண்டிருக்கிறது.

தமிழகக் கேரள எல்லையில் உள்ள இந்தக் கண்ணகிக் கோட்டத்தின் வனப் பகுதி எந்த மாநிலத்திற்கு உரியது என்று இன்றும் இறுதி செய்யப்படவில்லை.

மாநில எல்லை பிரிவினையின் போது தமிழர்கள் இழந்த இடுக்கி மாவட்டத்தின் ஒரு பகுதி அது என்பது குறிப்பிடத்தக்கது.

1983□இல் கேரளத் தொல்லியல் துறை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது. இதைப் பயன்படுத்தி கண்ணகிக் கோட்டத்தின் ஒரு பகுதியில் துர்க்கை அம்மன் சிலையை கேரள பக்தர்கள் நிறுவிக் கண்ணகிக் கோட்டத்தை உரிமை கொண்டாடத் தொடங்கினர். மேலும் 1986□க்குப் பிறகு ஆண்டுக்கு ஒரு நாள் மட்டுமே விழா நடத்த அனுமதி அளிக்கின்றனர்.



தேனி மாவட்டம், கூடலூர் பளியங்குடியிலிருந்து 6 கிலோமீட்டர் நடந்து சென்றால் கண்ணகிக் கோட்டத்தை அடைந்துவிடலாம். 12 அடி அகலம் கொண்ட இந்தப் பாதையில் சாலை அமைத்தால் தமிழர்கள் எளிதாகக் கண்ணகிக் கோட்டத்தை அடைந்து விட முடியும். ஆனால், இந்தச் சாலையில் பக்தர்கள் நடந்து செல்ல மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுவருகிறது. இதனால் குமுளிக்குச் சென்று அங்கிருந்து 16 கிலோமீட்டர் தூரம் ஜீப்பில் பயணித்தும், நடைப்பயணமாகவும் கண்ணகிக் கோட்டம் செல்லவேண்டிய நிலை இருக்கிறது.

தமிழக □ கேரள எல்லையை முறையாக அளவீடு செய்தாலே கண்ணகிக் கோட்டம் தமிழக எல்லைக்குள் வந்துவிடும். கேரள அரசின் இடையூறு இன்றித் தமிழக பக்தர்கள் கண்ணகிக் கோட்டம் சென்றுவர பளியங்குடிப் பாதையைச் சீரமைத்துக் கொடுத்தால் மக்கள் எவ்வித இடையூறும் இன்றி கண்ணகிக் கோட்டம் சென்றுவரலாம்.

கடந்த 2021 சட்டமன்ற தேர்தலின் பொழுது இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் கோயிலைக் கொண்டு முறையாகச் சீரமைத்துப் பராமரிக்க வேண்டும். தி.மு.க தேர்தல் வாக்குறுதியில் கண்ணகிக் கோட்டம் தொடர்பாகக் கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு காணப்படும் எனக் கூறியிருந்தது.

தேர்தல் வாக்குறுதியின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ் இன உணர்வாளர்களால் கோரிக்கைகள் மீண்டும் மீண்டும் வைக்கப்பட்டு வந்தது.

கடந்த திசம்பர் மாதம் தமிழக அரசின் அறநிலையத் துறை சார்பாக அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிற்குள் கண்ணகிக் கோவிலை கொண்டுவருவதற்கான நடவடிக்கையைத் தொடங்கினர். அதற்கானச் சுற்றறிக்கையும் கீழக் கூடலூர் பகுதி அறநிலையத்துறை மற்றும் அரசுத் துறைகளுக்கு அனுப்பப்பட்டிருந்தது. கேரளா அரசின் டிஜிட்டல் இ சர்வே எண் கேரளா பகுதிக்குள் கண்ணகிக் கோட்டம் இருப்பதாகக் காட்டப்பட்ட பொழுதும் தமிழக வனத்துறை மற்றும் அறநிலையத்துறை சார்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் தமிழக எல்லையில் உள்ள கண்ணகிக் கோட்டத்தை அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் எடுப்பதற்கு மறுப்பு இருந்தால் தெரிவிக்கவும் என அந்தச் சுற்றறிக்கையில் கூறப்பட்டிருந்தது. தமிழ் உணர்வாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையான கண்ணகிக் கோட்டத்தை தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் எடுப்பதற்கான தொடக்க வேலைகளாக இது வரவேற்பைப் பெற்றிருந்தது.

ஒரு மலையேறும் சுற்றுலாத்தலமாகவோ, இறை நம்பிக்கை கொண்ட வழிபாட்டு உணர்வாக இல்லையென்றாலும் இது தமிழர் நிலம், கண்ணகி தமிழ்ப் பண்பாட்டு அடையாளம் என்ற பார்வையில் வாய்ப்பு கிடைக்குமா என்று கடந்த ஆண்டுகளில் எல்லாம் கண்ணகிக் கோட்டத்தை நோக்கிய பயணத்தில் ஈடுபட்டு இருக்கிறோம்.

ஆறாவது ஆண்டுப் பயணமாக இவ்வாண்டும் அந்தப் பயணம் வாய்க்கப் பெற்றது.

கடந்த 2020□21 காலகட்டத்தில் கொரோனா பெருந்தொற்றின் காரணமாக கண்ணகிக் கோட்டத்திற்கான அனுமதி அளிக்கப்படாத காலகட்டத்தில் செல்ல இயலவில்லை.

இரண்டு ஆண்டு இடைவெளிக்குப் பிறகு 2022□ஆம் ஆண்டு சென்ற பொழுது நமக்கு ஒரு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது. கடந்த ஆண்டுகளில் இருந்ததை எல்லாம் விட மிக அதிகமாக கண்ணகிக் கோட்ட வழிபாடுகளில் வைதீகமும், ஆரிய பார்ப்பனியத் தன்மைகளும் புகுத்தப்பட்டிருந்தது. புதிதாக ஒரு பிள்ளையார் சிலை வைத்து வழிபடவும் தொடங்கியிருந்தார்கள். அதற்கு முன் எந்த ஆண்டும் இல்லாத யாகங்கள் எல்லாம் அந்தக் கோட்டத்திற்குள் வளர்க்கப்பட்டிருந்தது. மலையடிவாரத்தில் பாரதிய ஜனதாவின் மாநில நிர்வாகிகள் பங்கெடுக்கும் ஒரு ஊர்வலம் அமைக்கப்பட்டுத் தமிழ்நாட்டிலிருந்து ஏறுகிற பாதையைச் சீரமைக்க வேண்டும் என்று கோரிக்கையில் பழங்குடி மக்களிடம் கையெழுத்து இயக்கம் எல்லாம் நடத்தப்பட்டது.

அதுவரைக்கும் தமிழ்நாடு வாணிகச் செட்டியார் சங்கம் பல ஆண்டுகளில் பக்தர்களை வரவேற்றுப் பதாகைகள் வைத்திருப்பார்கள் கடந்த ஆண்டு ஜெகநாத் மிஸ்ரா என்கிறவர் தலைமையிலான ஒரு புதிய சாதி சங்கமும் அதில் தலை எடுத்தது.

பாரதிய ஜனதா அவர்களின் சார்பான சாதிச் சங்கங்கள் என்று மலையடிவாரத்தில் ஒரு வகை அரசியலும் கண்ணகிக் கோட்டத்தில் பிள்ளையார் சிலை வைதீக வழிபாடு நம்பூதிரிப் பார்ப்பனர்களின் ஆதிக்கம் என்றும் இருந்தது.

சிலப்பதிகாரத்தின் மீது தந்தை பெரியாருக்கு மாற்றுக்கருத்து இருந்த பொழுதும் பேரறிஞர் அண்ணாவும் அவரைப் பின்தொடர்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் கண்ணகியைத் தமிழ் பண்பாட்டின் ஒரு அடையாளமாகவே கருதி இருந்தனர்.

தமிழ்நாட்டில் கண்ணகி இருக்க வடநாட்டுச் சீதை எதற்கு என்று அண்ணா பேசியிருந்தார். சென்னை கடற்கரைச் சாலையில் கண்ணகிக்குச் சிலை வைத்தது அகற்றப்பட்ட பொழுது திமுகவினர் வைக்கிற கட்சி பதாகையிலும் கண்ணகி சிலை இருக்க வேண்டும் என்று கலைஞர் கருணாநிதி கூறியிருந்தார். திமுகவின் இளைஞர் அணி அலுவலகமான அன்பகத்தில் இன்றும் கண்ணகி சிலை இருக்கிறது. சிலப்பதிகாரத்தை தமிழ்நாடு எங்கும் மேடை போட்டு மக்கள் மையப்படுத்தியதில் திராவிட இயக்கத்தினரின் பங்கு முக்கியமானது. அப்படியான ஒரு அடையாளத்தை அரசியல் எதிரிகளிடம் கைவிட்டுவிடாதீர்கள் என்று நாமும் கூறி இருந்தோம்.

திசம்பர் மாதம் அறநிலையத்துறையின் முயற்சிகளின் பங்காக இந்த ஆண்டு கண்ணகிக் கோட்ட விழாவில் அறநிலையத்துறை பல சிறப்பான பணிகளை செய்திருந்தது.

மேலும் மலையில் இருக்கும் கண்ணகிக் கோட்டத்திலும் கடந்த ஆண்டு முழுக்க முழுக்க கேரளக் காவல்துறையினரின் ஆதிக்கம் மட்டுமே இருந்தது. இந்த ஆண்டு கோட்டம் தமிழகக் காவலர்களின் ஆதிக்கத்தில் இருந்தது

பளியங்குடி பாதையில் அறநிலையத்துறையானது ஆங்கில மருத்துவ முகாமின் கூடவே சித்த, ஹோமியோபதி மருத்துவ முகாம்களை அமைத்திருந்தது. குறிப்பாக சித்த மருத்துவ முகாமில் வெட்டிவேர் ஊறல் குடிநீர், பானகம் வழங்கப்பட்டதுடன் மலையிறங்கி வருவோருக்கு பயன்படுகின்ற வகையில் எண்ணெய் மசாஜ், தொக்கன சிகிச்சை மற்றும் வர்ம முறையில் வலி நீக்கும் சிகிச்சை போன்ற சித்த மருத்துவ வலிநீக்கு சிகிச்சைகளும் வழங்கப்பட்டன.

அறநிலையத்துறை சார்பில் மலையேறுவோருக்குத் தண்ணீர் உணவுப் பொட்டலமும், வாழைப்பழமும் வழங்கப்பட்டது. கடந்த காலங்களில் இத்தகைய அறப் பணியானது சாதியச் சங்களால் நிகழ்த்தப்பட்டு வந்தது. அறநிலையத்துறையின் பங்கேற்பானது 'இத்தகைய அரசியலில் இருந்து' கண்ணகி வழிப்பாட்டைப் பாதுகாத்திருக்கிறதென்றே சொல்லலாம்.

அண்மைக்காலமாக அறநிலையத்துறையின் பணிகளில் குறிப்பிடத்தக்க வரவேற்கக்கூடிய அம்சமாக அதனது வெளியீடுகளை குறிப்பிடலாம். அவ்வகையில் கண்ணகிக் கோட்டம் குறித்த அதாவது சிலப்பதிகாரம், கண்ணகி மற்றும் கண்ணகியின் பயணத்தை ஆய்வு செய்து கண்ணகிக் கோட்டத்தைக் கண்டடைந்த புலவர் கோவிந்தராசனார் தொடர்பான தகவல்களை, கட்டுரைகளை அறநிலையத்துறை சார்பாக வெளியீடாகக் கொண்டு வருதல் நலம் பயக்கக்கூடியதாக அமையும்.



சிலப்பதிகாரத்தை நாடக, தெருக்கூத்து, தோல் பாவைக் கூத்து போன்ற பல்வேறு நிகழ்ச்சிக் கலை வடிவங்களில் உருவாக்கி முழுநிலவு நாளின் இரவில் கம்பம் பகுதியில் கண்ணகி விழாவை நடத்த வேண்டும்.

கண்ணகிக் கோட்ட வழிபாடு தொடர்பான கோரிக்கைகளில் பெரும்பாலானோர் (ஏன்.. அனைவரும் என்று கூட சொல்லலாம்) தமிழ்நாட்டுப் பகுதியான பளியங்குடி வழி மலையேற்றுப் பாதையில் தார்ச்சாலை அமைக்கக் கோருகின்றனர். கடந்த காலங்களிலும் தமிழ்நாடு அரசு சார்பில் அத்தகைய முயற்சிகள் நடந்ததும் இங்கே குறிப்பிடத்தக்கது.

கம்பத்திலிருந்து 50 நிமிட பயணத்தில் குமுளியை அடைந்து, ஜீப்களின் மூலம் மலையேற வாய்ப்பிருந்தும் பலர் பளியங்குடி பாதையை தேர்ந்தெடுப்பதற்கான காரணம் இயற்கையினூடேயான சாகச பயண அனுபவமே (Naturalistically Adventuring expression) காரணம். ஆனால் அந்த பயணத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் போகிற வழியில் குடிநீர் சேவையையும் அரசு நிவர்த்தி செய்ய வேண்டிய தேவை இருக்கிறது.

மலையேற்றப் பாதையில் சாலை தேவையா இல்லையா என்பது நமக்கு இரண்டாவதாக இருக்கலாம் ஆனால் கண்ணகிக் கோட்டம் இருக்கும் வனப்பகுதி தமிழ்நாட்டு எல்லையில் இருக்கிறது என்பதை உறுதி செய்ய வேண்டும். கண்ணகிக் கோட்ட வழிபாட்டில் அங்கு வைக்கப்பட்டு வழிபடுகின்ற அந்த துர்க்கை சிலை அகற்றப்பட வேண்டும். ஒவ்வோர் ஆண்டும் கொண்டு வைக்கப்பட்டு எடுத்துச் செல்லப்படும் அந்த பிள்ளையார் சிலை கண்ணகிக் கோட்டத்தின் வழிபாட்டில் ஒரு அங்கமாக மாறிவிடக்கூடாது.

திராவிடம் என்பது ஒரு பண்பாட்டுச் சொல் என்று பேராசிரியர் தொ. பரமசிவம் அவர்கள் கூறுவார். கண்ணகி வழிபாடு என்பது பழைய தமிழ்நாடு சேர நாட்டிலும் தமிழ்நாட்டிலும் தமிழ் ஈழத்திலும் தொடர் ஒரு பண்பாடாகவே இருக்கிறது. இதனுள் ஆரிய வைதீகத்தன்மை கூடுவதையும் அதை சாதி சங்கங்கள் கைப்பற்றுவதையும் பாரதிய ஜனதா அரசியலாக்க முயற்சி செய்வதையும் தடுத்து தமிழ் பண்பாட்டின் ஒரு இலக்கியச் சான்றாக ஒரு தொன்மமாக இருக்கும் கண்ணகி வழிபாட்டை தமிழ்நாடு அரசு பூம்புகார், கம்பம், கூடலூர், மதுரை உள்ளிட்ட சிலப்பதிகாரத்தில் தொன்ம அடையாளங்களாக இருக்கும் பகுதிகளில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு விழாவாக சிறப்பாக எடுக்க வேண்டும்.

தமிழ்நாடு அரசின் சார்பாக சென்னையில் உள்ள கண்ணகி சிலையின் கீழ் மரியாதை செய்வதோடு நிறுத்திவிடாமல் தமிழ்நாடு அரசின் பிரதிநிதிகள் சுருளி மலையில் இருக்கும் கண்ணகிக் கோட்டத்திற்கு நேரடியாகச் சென்று அரச மரியாதை செலுத்துவதன் வழியாக அந்த இடத்தின் தமிழ்நாட்டின் உரிமை கோரலைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க முடியும்.

# பெரியகுளம் தாக்குதல்..
# தேனியில் கண்டன ஆர்ப்பாட்டம்.

*ஏப்ரல் .14 ,புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான காவல்துறையின் சாதிவெறி தாக்குதல் மற்றும் 63 பேர் சிறைப்படுத்தலைக் கண்டித்தும், *அவர்கள் மீதான பொய் வழ0க்கைத் திரும்பப்பெறக் கோரியும் , *சாதிய வன்மத்தோடு அப்பாவி மக்கள் மீது வெறித்தாக்குதல் நடத்திய காவல்துறையினர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும்.. தேனி அல்லி நகரத்தில் ,அம்பேத்கர் வழக்கறிஞர்கள் சங்கம் ~அம்பேத்கரிய பெரியாரிய சிறுபான்மையினர் நலக் கூட்டுக்குழு சார்பில் ஒருங்கிணைக்கப்பட்டது.



தோழர் மதியவன் இரும்பொறை தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்குத் தோழர்கள் அருந்தமிழரசு (ஜெய்பீம் புரட்சிப்புலிகள்),செல்வகுமார்(அம்பேத்கர் வழக்கறிஞர்கள் சங்கம்) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில்.. தோழர்.தியாகு (தமிழ்த்தேசிய விடுதலை இயக்கம்), தோழர்.வன்னியரசு(விடுதலைச் சிறுத்தைகள் கட்சி), தோழர் நிலவழகன் (மக்கள் தமிழகம் கட்சி), தோழர்.செல்லக்கண்ணு (தீண்டாமை ஒழிப்பு முன்னணி) மற்றும் பல்வேறு அமைப்புகளின் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி உரையாற்றினர்.

பாதிக்கப்பட்ட மக்களின் பங்கேற்பாலும், மக்கள் மன்றத்தில் அவர்கள் முன்வைத்த கேள்விகளால் ஆர்ப்பாட்ட இடம் உணர்ச்சிப்பூர்வமாக மாறியிருந்தது. அனுமதி வழங்கப்பட்டுக் ,கடைசி நேரத்தில் அனுமதி மறுத்திருந்த தகவல் முழுமையாகக் கிடைக்கப்பெறாததால் கூடிய தோழர்களிடம் தொடக்கத்தில் கடுமை காட்டிய காவல்துறை பாதிக்கப்பட்ட மக்களின் நியாயங்களைப் புரிந்து கொண்டு அமைதி காத்தனர்.

நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் உறுதியையும் இந்த ஆர்ப்பாட்டம் மக்களுக்குத் தந்திருக்கிறது என்பதைக் காண முடிந்தது.

மக்கள் தமிழகம் கட்சியின் தேனி மாவட்டப் பொறுப்பாளர் தோழர்.தமிழ்க்கனல், மதுரை மாவட்டப் பொறுப்பாளர் தோழர்.மலைச்சாமி, விருதுநகர் தோழர்கள் தமிழ்ச்செல்வன், தங்கப்பண்டியன் , பாளையம் பன்னீர்ச்செல்வம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# மூத்தத் தோழர் சி.உலகநாதன் 39ஆம் நினைவேந்தல்

பொதுவுடைமை இயக்கத்தின் மூத்த தோழர். "விருதைத்தந்தை " சி. உலகநாதன் அவர்களின் 39 ஆம் ஆண்டு நினைவேந்தல் பொதுக்கூட்டம் 21.5.2023 அன்று விருதுநகர், பாண்டியன் நகரில் நடைபெற்றது.





தமிழக அரசே! விருதுநகரில் இந்திய விடுதலைப் போராட்ட வீரர் தோழர் சி. உலகநாதன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைதிடுக! எனும் கோரிக்கையோடு.. தமிழ்த் தேசியத் தொழிலாளர் முன்னணியின் சார்பில் ஒருங்கிணைக்கப்பட்டிருந்த பொதுக்கூட்டத்திற்குத் தோழர் சின்ன மகாலிங்கம் (அமைப்பாளர்) தலைமை வகித்தார். கு.இரத்தினசாமி (நிறுவனர், இராவ்பகதூர இரட்டைமலை சீனிவாசன் மக்கள் நல இயக்கம்) வரவேற்றுப் பேசினார்.

தோழர்கள் வே. ராஜமாணிக்கம், ஜா. மரியசெல்வம், தமிழரசன், குமார், பிச்சைபண்டி, ராஜேசு, தங்கப்பண்டியன், மாரியப்பன், சிதம்பரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இப்பொதுக்கூட்டத்தில் மூத்தத் தோழர். எஸ்.கே.இராசேந்திரன் (சி.பி.எம்), தோழர்கள் வே.பாலமுருகன்(மாநிலக்குழு உறுப்பினர்,இந்தியப் பொதுவுடைமைக் கட்சி), பீமாராவ் சாக்கியா(மாநில மாணவரணிச் செயலாளர்,தலித் விடுதலை இயக்கம்), கோ.புஷ்பராஜ்(பாண்டியன் நகர் கிளைச்செயலாளர், சி.பி.எம்), லெ. மெய்யப்பன்(தென் மண்டலப் பொறுப்பாளர், (தமிழ்த் தேசிய குடியரசு இயக்கம்), இசை.மதிவாணன் (நாம் தமிழர் கட்சி) ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினர்.

இறுதியாக.. தோழர்.நிலவழகன்( தலைவர்,மக்கள் தமிழகம் கட்சி), தோழர்.கு.ஞா.பகத்சிங்,(ஒருங்கிணைப்பாகர்,உயர்நீதி மன்றத்தில் தமிழ் போராட்டக்குழு) தோழர்.பாவெல்(இனங்களின் இறையாண்மைக்கான இளைஞர் மாணவர் இயக்கம்) ஆகியோர் சிறப்புரையாற்றினார்.

நிகழ்வைத் தோழர்.கவுதமன்(மாநிலத் துணைக் கொள்கைப்பரப்புச் செயலாளர்,ஆதித்தமிழர் பேரவை) அவர்கள் சிறப்பாகத் தொகுத்து உரையாற்றினார். பங்கேற்ற பொதுவுடைமை இயக்கத்தோழர்கள் அய்யாவின் அரசியல் அறம் சார்ந்த பணிகளை, அவருடனான தங்களின் படிப்பினைகளை விரிவாகப் பகிர்ந்து கொண்டனர்.

# முள்ளிவாய்க்கால் அழிப்புக்கு எதிரான ஒப்பாரி மாநாடு.

தமிழ்த் தேசிய மக்கள் விடுதலைக்கழகம் மற்றும் தமிழ்த்தேசிய மாணவர் விடுதலைக் கழகம் ஒருங்கிணைப்பில்... முள்ளிவாய்க்கால் நினைவேந்தல். தமிழின அழிப்புக்கு எதிரான ஒப்பாரி மாநாடு சங்கரன்கோயில் ஆலங்குளத்தில் சிறப்புடன் நடைபெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் விடுதலைக் கழகத்தின் முதன்மைக் கள ஊழியர் தோழர் நிலவன் தலைமையில், தோழர்கள் எழில், மாறன், வரகுணராம பாண்டியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இம்மாநாட்டில் மக்கள் தமிழகம் கட்சித் தலைவர் தோழர் தோழர் நிலவழகன்,

உலகத் தமிழ்க் கழகத்தின் தலைவர் தமிழ்த்திரு நிலவழகன் , உயர்அற மன்ற வழக்குரைஞர் தோழர் ஞா. பகத்சிங் , இனங்களின் இறையாண்மைக்கான மாணவர் இளைஞர் இயக்கத்தின் தோழர் பாவெல் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

தோழர் தமிழீழன் அவர்கள் எழுச்சி முழக்கங்களோடு நிகழ்வை தொகுத்து வழங்கினார்.

தோழர் .தமிழரசு அவர்கள் நன்றி கூறினார். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டைத் தமிழ்த் தேசிய மக்கள் விடுதலைக் கழகத்தின் முதன்மை ஊழியர் தோழர்.செங்கணன் (எ) கணேசமூர்த்தி ,சட். இ., அவர்கள் செய்திருந்தார்.

நிகழ்விற்கு முன்னதாகத் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈகியர்களான போராளிகளுக்கும், மக்களுக்கும் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.



# தற்சார்பு மிக்கக் கல்விக் கொள்கையே தமிழ்நாட்டிற்குத் தேவை.

கனி. குறிஞ்சி

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு 2021 2022 இடைக்கால வரவு செலவுக் கூட்டத்தில் தமிழ்நாட்டுக்குத் தனியானதொரு கல்விக் கொள்கையை உருவாக்குவதற்கான குழு பற்றிய அறிவிப்பை 2021 அக்டோபரில் வெளியிட்டது.

"தமிழ்நாட்டின் வரலாற்று மரபு, தற்போதைய நிலைமை, எதிர்காலக் குறிக்கோளுக்கு ஏற்ப, மாநிலத்திற்கென தனித்துவமான மாநிலக் கல்விக் கொள்கை ஒன்றை வகுப்பதற்குக் கல்வியாளர்கள் மற்றும் வல்லுநர்களைக் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்றை இந்த அரசு அமைக்கும்" என முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

அறிவிப்புக்குப் பிறகு எட்டு மாதங்கள் கழித்து, தில்லி உயர் நீதிமன்றத்தின் மேனாள் நீதிநாயகமான த. முருகேசன் அவர்கள் தலைமையில் குழு ஒன்று தமிழக அரசால் அமைக்கப்பட்டது. சென்னை சவிதா பல்கலைக் கழகத்தின் மேனாள் துணைவேந்தரான ஜவகர் நேசன், இசைக்கலைஞர் டி எம் கிருஷ்ணா, சதுரங்க விளையாட்டு வீரர் விஸ்வநாதன் ஆனந்த், எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன், தேசியக் கணிதவியல் ஆய்வு நிறுவனத்தின் மேனாள் கணினி அறிவியல் பேராசிரியர் ராமானுஜம், மாநிலத் திட்டக் குழு உறுப்பினர்கள் பேராசிரியர் சுல்தான் இசுமாயில், பேராசிரியர் ராம. சீனிவாசன், ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் ( யுனிசெப்) அமைப்பின் மேனாள் சிறப்புக் கல்வி அலுவலர் அனிதா ரத்னம், கல்வியாளர்கள் துளசிதாஸ், மாடசாமி, நாகப்பட்டினம் குப்பம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் இரா. பாலு, அகரம் அறக்கட்டளையைச் சார்ந்த ஜெய் ஸ்ரீ தாமோதரன் உள்ளிட்டவர்கள் இக்குழுவில் இடம் பெற்றிருந்தனர். ஓராண்டிற்குள் இக்குழு தமிழ்நாட்டுற்கெனப் புதிய கல்விக் கொள்கையை அறிவிக்கும் எனவும் செய்திகள் வெளியாயின.

நீதி நாயகம் முருகேசன் அவர்கள் தலைமையிலான கல்விக்குழு தமிழகத்தில் சில பகுதிகளில் கூட்டங்களை நடத்திப் பல்வேறு பரிந்துரைகளைப் பெற்றுக் கொண்டது.

ஒன்றிய அரசு செயல்படுத்தத் துடிக்கும் தேசியக் கல்விக் கொள்கை 2020 மிகவும் பிற்போக்காக உள்ளதால், மையப்படுத்தப்பட்ட அக்கொள்கைக்கு மாற்றாகத் தமிழ்நாட்டின் கல்விக் கொள்கை உருவாக்கப்படும் என்ற எதிர்பார்ப்புத் தமிழகம் முழுவதும் நிலவியது. அதை எதிரொலிக்கும் வகையில் எதிர்க்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகம், தேசியக் கல்விக் கொள்கை 2020 ஐக் கடுமையாக எதிர்த்து வந்தது. அதை முற்றிலும் ஏற்க முடியாது எனவும் தேர்தல் வாக்குறுதி அளித்திருந்தது.

ஆனால், ஆட்சிக்கு வந்த பிறகு, அரசு மற்றும் அதிகாரிகள் தெரிவித்த சில கருத்துகள் குழப்பத்தை உண்டாக்கின. "தேசியக் கல்விக் கொள்கை 2020 □ இல் இருக்கின்ற நல்லதை மட்டும் எடுத்துக் கொண்டு நாங்கள் கண்டிப்பாகச் செயல்படுவோம்" எனப் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் மற்றும் நீதிபதி முருகேசன் ஆகியோர் 2021 திசம்பரில் தெரிவித்தனர். அது மட்டுமல்லாமல், "இந்தியைத் தமிழகத்தில் படிக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. மூன்றாம் மொழியாக எதையும் படிக்கலாம்" எனப் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் தெரிவித்த கருத்து அதிர்ச்சி அலைகளை உருவாக்கியது.

இந்த நிலையில்தான் துணைக் குழுக்களின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்ட பேராசிரியர் ஜவகர் நேசன் அவர்கள் கல்விக் குழுவிலிருந்து விலகுவதாக வெளியிட்ட அறிக்கை, பெரும் புயலை உருவாக்கியுள்ளது.

"அறிவியல் ரீதியாக நிறுவப்பட்ட முறைகளையும், தரவுகளையும் பின்பற்றாமல், தனித்துவம் மிக்க கல்விக் கொள்கையை உருவாக்க முடியாது. மேலும் ஒவ்வொரு கொள்கையையும் அமல்படுத்துவதில் உள்ள பொருளாதார, சமூகச் சிக்கல்களை ஆய்வு செய்து நமக்கானதைத் தேர்வு செய்ய வேண்டும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு, கல்விக் கொள்கை வடிவமைப்புப் பணியில் ஈடுபட்டு வந்தோம். அதில் உலக அளவில் 113 வல்லுநர்கள் கொண்ட 13 துணை குழுக்கள் அமைத்தது, 22 கல்வி நிறுவனங்களில் மாதிரி ஆய்வுகள் முடித்தது உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகள் அடங்கும். இறுதியாக எனது ஆய்வு முடிவுகள் மற்றும் 13 துணை குழுக்களின் பரிந்துரைகளைக் கொண்டு இடைக்கால அறிக்கையைத் தயாரித்துக் குழுவின் தலைமையிடம் சமர்ப்பித்தேன். இது நீண்ட காலம் வழிகாட்டக் கூடியது. எனினும் சனநாயகமற்ற முறையில் செயல்படும் தலைமை மற்றும் சில மூத்த ஐஏஎஸ் அதிகாரிகளின் அதிகாரத் தலையீடுகளால் இயங்க முடியாமல் குழு தடுமாறி வருகிறது" எனவும், அமைக்கப்பட்ட குழுவின் போக்கு, ஒன்றிய அரசின் தேசியக் கல்வித் திட்டம் 2020 ஐத் தழுவியே இருப்பதாகவும், தமிழ்நாட்டுக்கான தனித்துவமான கல்விக் கொள்கையை இக்குழு உருவாக்குவது ஐயமே எனவும் தற்பொழுது பேராசிரியர் ஜவகர் நேசன் அவர்கள் குற்றம் சாட்டுகிறார்.

தேசியக் கல்விக் கொள்கைக்கு மாற்றான கல்விக் கொள்கையை வலியுறுத்தியதால் அவர் மிகக் கடுமையான அழுத்தத்திற்கும், அச்சுறுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டதாகவும், அதிகாரிகள் சிலர் அவரை மிகவும் இழிவான முறையில் நடத்தியதாகவும், தனது அறிக்கையில் ஜவகர் நேசன் பதிவிட்டுள்ளார். மேலும் குழுத் தலைவர், குறுக்கீடு செய்யும் அதிகாரிகளைச் சங்கடப்படுத்த விரும்பவில்லை எனவும், அவர்களின் தலையீட்டைத் தொடர அனுமதித்தார் எனவும் குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழகத்திற்கான புதிய கல்விக் கொள்கை உருவாக்கம் என்பது, வெறுமனே கல்வித் துறை மட்டுமே தொடர்பானது அல்ல என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அது மாநிலங்களின் அதிகார எல்லை மற்றும் இறையாண்மை குறித்ததுமாகும்.

இந்தியா ஒரு கூட்டாட்சி நாடு என்ற கூச்சல் அடிக்கடி எழுப்பப்பட்டாலும், அது அதிகாரங்கள் அனைத்தையும் மையப்படுத்தி வைத்திருக்கும் ஒற்றை ஆட்சி என்பதுதான் மெய் நடப்பாகும். எனவேதான் தமிழக ஆளுநர் ரவி, ஐஏஎஸ் / ஐபிஎஸ் அதிகாரிகள் கூட்டத்தைத் தனியே கூட்டி, அவர்கள் ஒன்றிய அரசுக்குத்தான் கட்டுப்பட்டவர்கள் எனவும், அதற்கு அவர்கள் விசுவாசமாக இருக்க வேண்டும் எனவும் அருள்வாக்கு வழங்குகிறார். ஆகவே அதிகாரத்தைச் செயல்படுத்தும் உயரதிகாரிகள், ஒன்றிய அரசின் மனங்கோணாமல் நடந்து கொள்ள வேண்டும் என்ற மனக்கட்டமைப்புக் கொண்டவர்களாக உள்ளனர். அதன் விளைவுதான் ஒன்றிய அரசின் தேசியக் கல்விக் கொள்கையை மாநில அரசின் கல்விக் குழுவில் திணிக்கும் அணுகுமுறை மேலோங்குகிறது.

"இல்லம் தேடிக் கல்வி, நான் முதல்வன் போன்ற திட்டங்கள் மூலம் தேசியக் கல்விக் கொள்கையின். பரிந்துரைகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது" என அண்ணா பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் குறிப்பிட்டதை இத்தருணத்தில் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மேலும் ஒன்றிய அரசின் கல்விக்கான துணை அமைச்சர் தமிழ்நாட்டிற்கு வந்த பொழுது, "தேசிய கல்விக் கொள்கை 2020 □ ஐ மறுப்பதாக இதுவரை எழுத்து மூலமாகத் தமிழக அரசு, ஒன்றிய அரசுக்குத் தெரிவிக்கவே இல்லை" எனக் குறிப்பிட்டார். ஒன்றிய அரசு அமைச்சரின் இக்கருத்துக்கு மாநில அரசு மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை என்பது கருதத்தக்கது.

தேசியக் கல்விக் கொள்கை 2020 ஐத் தமிழகம் ஏன் ஏற்க மறுக்கிறது என்பது முக்கியமான கேள்வியாகும். தேசியக் கல்விக் குழுவில் உள்ளவர்களின் பின்னணியை அறிந்து கொண்டாலே இக்கேள்விக்கான விடை துலங்கும்.

குழுவின் தலைவரான கஸ்தூரி ரங்கன், முழுக்க முழுக்க ஆர்எஸ்எஸ் ஆதரவாளர். காவித் துண்டு அணிந்து கொண்டு கூட்டங்களில் பங்கேற்பவர்.

இக்குழுவின் மிக முக்கியமான உறுப்பினர் எம்.கே. சிறீதர். இவர் ஆர் எஸ் எஸ் இயக்கத்தின் தேசியத் தலைவராக ( சர்சங்சலக் ) இருப்பவர். மேலும் ஆர்எஸ்எஸ் இயக்கத்தின் மாணவர் அமைப்பான ஏபிவிபி□யின் தேசியத் துணைத் தலைவராகவும் உள்ளார். வேத கணிதத்தையும், , சமஸ்கிருதத்தையும் என்றுமே உயர்த்திப் பிடிப்பவர். மற்றோர் உறுப்பினரான கிருஷ்ண மோகன் திரிபாதி, இலக்னோ ஆர்எஸ்எஸ் ஆய்வு மையத்தின் தலைவர் ஆவார். அடுத்து, இந்திரா காந்தி பழங்குடி பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரான டி.வி. கட்டிமணி, பல்கலைக் கழகத்திலேயே அதிரடியாக அனுமன் சிலையை நிறுவி, அதற்குப் பூசை செய்து கொண்டாடுபவர். மற்றொருவரான மஜார் ஆசிப் என்பவர் சவகர்லால் நேரு பல்கலைக் கழக நிர்வாகத்தின் கைப்பாவையாக இருந்து சனாதனக் கொள்கையைத் திணிப்பதில் முன்நிற்பவர். இப்படி முழுக்க முழுக்க இந்துத்துவ அடியாட்களைக் கொண்டு உருவாக்கப்பட்டதுதான் தேசியக் கல்விக் கொள்கை 2020. எனவே இதை வேரோடும், வேரடி மண்ணோடும் தோண்டிப் புதைத்தால் ஒழிய, விடிவு கிடையாது.

கல்வி மூலமே சனாதனக் கொள்கையை எளிதில் பரப்ப முடியும் என்பதில் மூர்க்கமாக இருக்கிறது பாரதிய ஜனதா கட்சி அரசு. பிற்போக்கான வேதப் பண்பாட்டை உயர்த்திப் பிடிக்கும், சமூக நீதியைப் புறக்கணிக்கும், மும்மொழியைத் திணிக்கும், சமசுகிருதத்தைக் கொண்டாடும், குலக்கல்வியை நுழைக்கும் தேசியக் கல்விக் கொள்கையை ஏற்பது, கல்வியில் சிறந்த தமிழ்நாட்டை முற்றிலும் சீரழித்துவிடும்.

இந்தியா என்பது ஒரு நாடல்ல, அது ஒரு துணைக்கண்டம். எனவே இந்தத் துணைக் கண்டம் முழுவதற்கும் ஒரே கல்வி முறை என்பது சனநாயகத்திற்கு எதிரானது, மக்களுக்கு எதிரானது, தேசிய இனங்களுக்கு எதிரானது.

எனவே வணிகமயம், காவிமயம், ஒற்றைமயம் ( Commercialization, Communalaization, Centralaization CCC ) எனக் கல்விப் புலத்தையே நாசமாக்கும் தேசியக் கல்விக் கொள்கை 2020□க்கு மாற்றாக, தற்சார்பு மிக்க, இறையாண்மை மிக்க, தனித்துவமான கல்விக் கொள்கையை உருவாக்கத் தமிழக அரசு உறுதி பூணவேண்டும். அதுதான் உண்மையான "திராவிட மாடல்" ஆக இருக்கும்.

# புலவர் கலியபெருமாள்

# தமிழ்த்தேசியத்திற்குக் கருவி ஏந்திக் களமாடிய காலத்தின் குறியீடு!

**கடந்த 14 5 23 அன்று சீர்காழியில் நடைபெற்ற புலவர் கலியபெருமாள் அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சியில் பேராசிரியர் த. செயராமன் அவர்களின் உரை..**

இன்று புலவர் கலியபெருமாள் அவர்களின் 100□வது ஆண்டு நினைவு நாளையொட்டி புகழஞ்சலி செய்கிறோம்.

இருபதாம் நூற்றாண்டு கண்ட இணையற்ற தமிழ்த்தேச விடுதலை போராளி புலவர் கு. கலியபெருமாள்,

பகுத்தறிவு, வர்க்க விடுதலை, சாதி ஒழிப்பு, விவசாயிகளுக்கானப் போராட்டம், ஈழ விடுதலை ஆதரவு, மொழிப் பாதுகாப்பு, தமிழ்நாடு விடுதலைக்கு ஆயுதமேந்திய போராட்டம் என வாழ்ந்த தமிழ்த் தேச போராளியின் நினைவுநாள் இன்று!(மே 16).

பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் அறிமுகம் கிடைத்து, பகுத்தறிவாளராக, மண் விடுதலை கோருபவராக மாறினார்.

திருவையாறு கல்லூரியில் புலவர் படிப்புப் படிக்க இணைந்த நிலையில், அக்கல்லூரியில் சாதி வேற்றுமை, பார்ப்பன மாணவர்கள் உள்ள விடுதியில் பிற மாணவர்கள் நுழையக்கூடாது என்பது போன்ற கொடுமைகளை எதிர்த்துப் புலவர் கலியபெருமாள் புத்துலக சிற்பகம் என்னும் மாணவர் அமைப்பை ஏற்படுத்தி மாணவர்களை திரட்டிப் போராடி சாதி வேற்றுமையை ஒழித்தார்.

இந்திய அளவில் நக்சலைட் இயக்கத்தைத் தொடங்கிய சாரு மஜூம்தார் தமிழகத்திற்கு வந்தபொழுது. அவரைப் பெண்ணாடம் அருகில் உள்ள முந்திரிக் காட்டுக்கு வரவழைத்து, தோழர்களுடன் இரகசியமாகக் கூட்டம் அமைத்துத் தமிழ்நாட்டில் நக்சலிய இயக்கத்திற்குத் தொடக்கம் அளித்தார் புலவர் கலியபெருமாள். சாருமஜூம்தார் தோற்றுவித்த இ.பொ.க.(மா.லெ) இயக்கம் தமிழகத்தில் வேரூன்றக் காரணமாக இருந்தவர்களில் முக்கியமானவர் கலியபெருமாள்.

பெரும் நிலப்பிரபுக்களின் நிலங்களுக்குத் தனது தோழர்களுடனும், பொது மக்களுடனும் திரண்டு சென்று, அதிரடியாக அறுவடை நடத்தி நெல் மூட்டைகளைக் கடத்தி வந்து கிராமத்தினருக்குப் பகிர்ந்து கொடுத்தார். பெண்ணாடம் பகுதி கரும்பு விவசாயிகளுக்கு உரிய பணத்தைக் கிடைக்கச் செய்யும் வகையில், சர்க்கரை ஆலைகளுக்கு எதிரான போராட்டங்களையும் தலைமையேற்று நடத்தினார்.

1970□ஆம் ஆண்டு அவரது சொந்தக் கிராமமான சௌந்திரசோழபுரத்தில் உள்ள தனது தோப்பில் கணேசன், காணியப்பன், சர்ச்சில் ஆகிய மூன்று தோழர்களுடன் தற்பாதுகாப்புக்காக வெடிகுண்டு தயாரித்தபொழுது, எதிர்பாராத விதமாக வெடிகுண்டு வெடித்து மூன்று இளைஞர்களும் அதே இடத்தில் சிதறிப்போனார்கள்.

அருகில் இருந்த புலவர் கலியபெருமாளுக்கும் பலத்த காயம். இறந்துபோன மூன்று இளைஞர்களின் உடல்களையும் அருகிலேயே புதைத்துவிட்டு, தலைமறைவானார் புலவர் கலியபெருமாள். 1971இல் கலியபெருமாளும், அவரது மகன்களும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

காவல்துறை உளவாளி ஐயம்பெருமாள் கொலை வழக்கில் 1972 ஆம் ஆண்டு கலியபெருமாளுக்கும் அவரது மூத்த மகன் வள்ளுவனுக்கும் மரணதண்டனை வழங்கப்பட்டது. இளையமகன் சோழ நம்பியார், கலிய பெருமாளின் ஒன்றுவிட்ட தம்பிகள் மாசிலாமணி, இராஜமாணிக்கம், ஆறுமுகம், கலியபெருமாளின் மனைவியின் அக்காள் அனந்தநாயகி ஆகியோருக்கு ஆயுள் தண்டனை கடலூர் நீதிமன்றத்தில் விதிக்கப்பட்டது. அவரது குடும்பமே தண்டிக்கப்பட்டது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் வள்ளுவனுக்கு ஆயுள் தண்டனை என்றும், மற்றவர்களுக்கு அதே தண்டனை என்றும் உறுதிசெய்யப்பட்டது.

புலவர் கலியபெருமாளை மரணதண்டனையிலிருந்து காக்க பலரும் போராடி, கையெழுத்து இயக்கம் நடத்தி இந்தியக் குடியரசு தலைவருக்கு அனுப்பினர், பத்திரிகையாளர் பர்தேஷ் என்பவர் முயற்சிகளை முன்னெடுத்தார். 1973 இல் மரண தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

புலவரையும், வள்ளுவனையும் திருச்சி நடுவண் சிறையில் அடைத்தது காவல்துறை. 24 மணி நேரமும் தனிமைப்படுத்தப்பட்ட சிறைக்கொட்டடியில் இருவரையும் அடைத்து வைத்தனர். அந்நிலையிலும் சிறையில் நிலவிய ஏற்றத்தாழ்வுகள், உரிமை மீறல்கள் போன்றவற்றிற்கு எதிராக அங்கேயும் குரல் கொடுத்தனர் புலவரும், வள்ளுவனும். அதன் விளைவாக காவல்துறையின் கட்டற்ற அடக்குமுறைகளுக்கு ஆளாகினர்.

பல்வேறு சிறைச்சாலை மாற்றங்களுக்குப் பிறகு சென்னை நடுவண் சிறையில் இருவரையும் அடைத்தனர். அங்குதான் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனோடு வள்ளுவனுக்கும், புலவருக்கும் ஆழ்ந்த நட்பு உருவானது. பின்னாளில் தோழர் வள்ளுவன்-அகிலா திருமண அறிவிப்பு நிகழ்வில் பிரபாகரன் நேரிடையாக வந்து கலந்துகொண்டு மணமக்களுக்குத் தனது வாழ்த்தினைத் தெரிவித்தார். பிரபாகரன் தமிழீழம் சென்ற பிறகு புலவர் கலியபெருமாளைப் பற்றி நினைவுகூர்கையில் 'தான் சந்தித்த தமிழக தலைவர்களிலேயே நேர்மையான தலைவர் புலவர் கலியபெருமாள்' என்று புகழாரம் சூட்டினார்.

புலவர் கலியபெருமாளை மரணதண்டனையிலிருந்து காக்க பலரும் போராடி, கையெழுத்து இயக்கம் நடத்தினர்.

1981□இல் கலியபெருமாளும், அவர் குடும்பத்தினர் ஆக ஏழு பேர் சிறையில் வாடுவதை அறிந்த தில்லியைச் சேர்ந்த பத்திரிக்கையாளர் "கன்ஷியாம் பர்தேசி" என்பவர் நேரில் வந்து சந்தித்து பின் மனித உரிமை ஆர்வலர்களை ஒருங்கிணைத்து, குழு அமைத்து, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து, அவர்கள் அனைவரையும் 1983 ஆம் ஆண்டு நிபந்தனையற்ற நீண்டகால பரோலில் வெளியே மீட்டு வந்தார். பின்னர் சில ஆண்டுகள் கழித்து அதே நீதிமன்றத்தின் அறிவுறுத்தலின் பேரில் தண்டனையில் இருந்து முழுமையாக விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு உச்சநீதிமன்ற நீதியரசர்கள் ஆர்.என். பகவதி மற்றும் வி.ஆர். கிருஷ்ணய்யர் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோது இவ்வழக்கின் உண்மைத் தன்மையை உணர்ந்து கொண்ட நீதிபதிகள், இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட சிறைக்கைதிகள் அனைவரையும் மனிதாபிமானத்துடன் விடுதலை செய்ய வேண்டுமென்று தமிழக அரசுக்கு உத்தரவிட்டனர்.

அதன்பின்னர், 12 ஆண்டுகளுக்குப் பிறகு, புலவர் கலியபெருமாள் மற்றும் அவரது குடும்பத்தினர் அனைவரும் நிபந்தனையற்ற பிணையலில் விடுதலை செய்யப்பட்டார்கள்.

வேலூர் சிறையில் இருந்தபோது தமிழ்நாடு விடுதலை குறித்து சக தோழர்களிடம் விவாதித்தார் புலவர் கலியபெருமாள். சிறையிலிருந்து வெளிவந்தவுடன், 1984□ஆம் ஆண்டு மே 15 மற்றும் 16 ம் நாள்களில் பெண்ணாடத்தில் தேசிய இனங்களின் விடுதலை குறித்த மாநாட்டை நடத்தினார். அம்மாநாட்டின் முதல் நாளன்று அவர் தலைமை தாங்கினார். ஈழத் தமிழர்களுக்குத் தனிநாடு என்ற கோரிக்கையை வலியுறுத்திப் பேசியதன் விளைவாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து (மார்க்சிய□லெனினிய) நீக்கப்பட்டார்.

தம் விடுதலைக்குப் பிறகு, தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சியை (மார்க்சிய□லெனினிய) சக தோழர்களோடு உருவாக்கி முன்னெடுத்துச் சென்றார். தமிழ்நாடு விடுதலைப் படை உருவாக்கம் பெற்றது. 1□9□1987அன்று பொன்பரப்பியில் தோழர் தமிழரசன் கொல்லப்பட்டார்.

தென்னார்க்காடு மாவட்டம், மீன் சுருட்டியில், தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில் நடத்தப்பட்ட சாதியொழிப்பு மாநாட்டிற்குப் புலவர் கலியபெருமாள் தலைமை தாங்கி நடத்தினார். அம்மாநாட்டில் தான் தோழர் தமிழரசன் சாதி ஒழிப்பு பற்றியும், தமிழக விடுதலைப் பற்றியும் விரிவான அறிக்கையை அளித்தார்.

தமிழகத்தில் நக்சல் இயக்கத்தைத் தொடங்கிய புலவர், பிறகு தமிழ்த் தேசியராக மாறினார்

இவர் தனது வாழ்க்கை வரலாறை "மக்களின் துணையோடு மரணத்தை வென்றேன்" என்ற பெயரில் சுயசரிதையாக எழுதியுள்ளார்.

16 05 2007 அன்று மறைந்த அவரின் உடல் பெண்ணாடம் அருகேயுள்ள அவரது சொந்த ஊரான சௌந்தரசோழபுரத்தில், (22 2 1970) அவரது தோழர்கள் சர்ச்சில், கணேசன், காணியப்பன் மரணம் எய்திய அதே இடத்தில், தென்னஞ்சோலை செங்களத்தில் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

புலவர் கலியபெருமாள் தோழர் தமிழரசன் ஆகியோர் தமிழ்த் தேசியத்தின் பொருளுணர்ந்து தங்கள் இலக்குகளை நிர்ணயித்தனர்.

இந்தியா தேசிய இனங்களின் சிறைக்கூடம்; சேரிகள் என்பவை தாழ்த்தப்பட்ட மக்களின் சிறைக்கூடம் என்ற தோழர் தமிழரசனின் சொற்கள் மிகுந்த ஆய்வின் அடிப்படையில்தான் கூறப்பட்டிருக்க முடியும். தீண்டத்தகாதவர்களாக ஐந்திலொரு பங்கு மக்களைத் தூரத்து சேரிகளில் அடைத்து வைத்திருப்பதைச் சனநாயகமாக ஏற்காதவர்கள் தோழர் தமிழரசன் □ புலவர் கலியபெருமாள் ஆகியோர். இந்த இரு மாபெரும் போராளிகளின் பார்வையும் ஒன்றே.

1985 இல் மீன்சுருட்டியில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் நடத்திய கருத்தரங்கில் "சாதி ஒழிப்பின் தேவையும், தமிழக விடுதலையும்" என்று தலைப்பிட்ட தோழர் தமிழரசனின் அறிக்கை சமூக விடுதலையையும், தேசிய இன விடுதலையையும் இணைத்துப் பேசுகிறது.

இடைக்காலத்தில் ஐரோப்பாவில் நிலவிய நிலப்பிரபுத்துவ அழிவில் தான் தேசங்கள் எழுந்தன.. அழிவுற்ற நிலப்பிரபுத்துவ இடிபாடுகளிலிருந்து முதலாளிய வகுப்பு எழுந்து நின்றது. ஆனாலும் பிரபுத்துவ சொச்சம் மிச்சங்கள் முதலாளிய புரட்சியின் காலம்வரை தொடர்ந்தன. 1789□இல் பிரான்சில் அதுவரை பிறப்பின் அடிப்படையில் பெருமை பேசிக் கொண்டிருந்த பிரபுக்கள், குருமார்கள் அவர்களுக்குக் கீழே அடிமட்டத்தில் உழவர்கள், செர்ஃப்கள் என்ற ஏற்றத்தாழ்வுகள் ஒரே நாளில் ஒழித்துக் கட்டப்பட்டன. பிரெஞ்ச் தேசத்தவர், பிரெஞ்சு குடிமக்கள் என்ற ஒற்றை அடையாளம் நிறுவப்பட்டது. இந்த நிகழ்வுப் போக்கை குறிக்கும் வகையில் தான் நேஷனலிசம் (தேசியம்) என்ற சொல் எழுந்தது. தேசியம் (Nationalism) என்ற சொல்லின் சாரம் இதுதான். ஐரோப்பாவில் ஜனநாயகப் புரட்சி நடைபெற்றபோது சமூகத்தில் பிறப்பின் அடிப்படையில் இருந்த ஏற்றத்தாழ்வுக் குப்பைகளை எல்லாம் அள்ளி எறிந்துவிட்டு, ஒற்றை தேசிய இன அடையாளத்தை நிறுவியது. அதுவே ஐரோப்பாவின் பிற தேசங்களிலும் எதிரொலித்தன. ஆனால் இந்தியாவில் நடந்தது என்ன? ஐரோப்பாவின் ஜனநாயகப் புரட்சியின் விளைவுகள் ஆங்கிலேயர்களால் இங்கும் கொண்டு வந்து தரப்பட்டன. இந்திய அரசியலமைப்பு அதை ஏற்று நிலைப்படுத்தியது. ஆனால் முதலாளிய(ஜனநாயக)ப் புரட்சியின் போது மேற்குலகில் நிகழ்ந்ததுபோல ஏற்றத்தாழ்வு சமூகப் பிளவுகள் இங்கே ஒழிக்கப்படவில்லை. ஜனநாயகப் புரட்சி அளித்த சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்றவை இந்தியாவில் இன்றளவும் பொருளற்றவையாக இருக்கின்றன. அதேநேரம் ஐரோப்பாவில் சமூகப் பிளவுகள் ஒழிக்கப்பட்டு விட்ட காரணத்தால் அவை பொருள் பொதிந்த கருத்தாக்கங்களாக உள்ளன. இவற்றையெல்லாம் நன்கு உணர்ந்த நிலையில்தான், முதலாளிய புரட்சி செய்த வேலையையும், தேசிய இன விடுதலைப் புரட்சி செய்ய வேண்டிய வேலையையும் இணைத்துத் தோழர் தமிழரசன், புலவர்

கலியபெருமாள் ஆகியோர் பேசினர்.

ஒருபுறம் தமிழ்த்தேசியம் பேசிக்கொண்டு, மற்றொருபுறம் சாதிகளை, சாதி அடையாளங்களை முன்னிறுத்துவது என்பது தமிழ்த் தேசிய ஒழிப்பு வேலை திட்டம் ஆகும். சாதிகளை ஒழிப்பதுதான் தமிழ்த் தேசியம் ஆகும்.

தமிழ்த் தேசிய போராளிகளான புலவர் கலியபெருமாள் □ தோழர் தமிழரசன் ஆகியோரை அவர்கள் எந்த சாதியைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளப்படுத்தி அவர்களுக்கு ஒரு சாதி அடையாளம் கொடுத்தாலே போதும்; அதுவே அவர்களை இழிவுபடுத்துவதாகத்தான் பொருள். புலவர் கலியபெருமாள் தோழர் தமிழரசன் ஆகியோர் சாதிக்கு அப்பாற்பட்டவர்கள்; சாதி அடையாளத்தை எதிர்த்தவர்கள்; சாதி ஒழிப்புக்கு பங்களித்தவர்கள். தேசிய இன ஓர்மைக் குறியீடாக விளங்கியவர்கள்.

தமிழ்த் தேசியம் கருவி ஏந்தி களமாடிய எழுச்சிமிகு காலத்தின் வரலாற்றுப் பெருமகன் புலவர் கலியபெருமாள். அவருக்கும் புகழஞ்சலி செய்கிறோம்.

# புலவர் கலியபெருமாள், தோழர் தமிழரசன் தமிழ்த் தேச விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகள்..

### கடந்த 14 5 23 அன்று சீர்காழியில் நடைபெற்ற புலவர் கலியபெருமாள் அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சியில் தோழர் பொழிலன் உரை..



புலவர் கலியபெருமாள் மறைவுற்று 16 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன..

இந்த ஆண்டு அவரின் நூறாவது அகவையாண்டு..

புலவர் கலியபெருமாள் அவர்களும் தோழர் தமிழரசன் அவர்களும் தமிழ்த் தேச விடுதலைப் போராட்டத்தின் முன்னோடித் தலைமைகள் என்று நாம் ஏற்றுக்கொண்டு அவர்களைப் பின் தொடர்ந்து செயல்பட்டு வருகிறோம்..

தமிழ்த் தேச விடுதலைப் போராட்டம் அவர்களிலிருந்து மட்டுமே தொடங்கிடவில்லை.. அதற்கு ஏறத்தாழ 85 ஆண்டுக் கால வளர்ச்சி இருக்கிறது..

1938 தான் முதன் முதலில் தமிழ்நாடு தமிழருக்கே! – என்கிற முழக்கம் மறைமலை அடிகள் தலைமையில் சோமசுந்தர பாரதியார், பெரியார் உள்ளிட்டுப் பலரும் கலந்து கொண்ட மாநாட்டில் அறிவிக்கப்பட்டது..

அதன் பிறகு அந்த முழக்கத்தை 1940, 44, 45 ஆகிய காலங்களில் தொடர்ந்து பெரியார் வலியுறுத்தி வந்தார்.. திராவிட நாடு என்கிற பெயரில் அன்றைய சென்னைத் தலை மாநிலத்தை (மாகாணத்தை) அடையாளப்படுத்தி அவர் திராவிட நாடு முழக்கத்தை இடையில் வலியுறுத்தினார்.. 1956 மொழிவழி மாநிலங்களின் பிரிவுக்குப் பிறகு இனி, திராவிட நாடு என்பது சரியில்லை என்று அறிவித்ததோடு, அன்று முதல் தமிழ்நாடு தமிழருக்கே என்று வலியுறுத்தி இந்தப் போராட்டங்களை முன்னெடுத்து நடத்தி வந்தார்.. வடநாட்டான் கடை மறியல், இந்தியக் கொடி எரிப்பு, தமிழ்நாடு நீங்கலாக இந்தியப் பட எரிப்பு – என்ற வகையில் எல்லாம் எண்ணற்ற போராட்டங்களை முன்னெடுத்து வந்தார்..

தமிழ்நாடு விடுதலை அரசியலில் இது ஒரு வழித்தடமாக இருந்தது..

இன்னொருபுறம்.. 1895 □ஆம் ஆண்டில் தமிழன் □ என்று அனைவரும் பதிவு செய்து கொள்ள வேண்டும் என வலியுறுத்திய அயோத்திதாசப் பண்டிதர் தொடங்கி இரட்டைமலை சீனிவாசன் உள்ளிட்டு எண்ணற்ற அடித்தட்டு மக்களின் தலைவர்கள் சாதி ஒழிப்பு அரசியலை முன்னெடுத்து வலுவாகச் செயல்பட்டனர்.. இருப்பினும் அப்போராட்டத்தைத் தமிழ்த் தேச விடுதலை அரசியலோடோ, வகுப்பு (வர்க்க) ஒழிப்பு அரசியலோடோ இணைத்து அவர்கள் முன்னெடுக்கவில்லை..

அதேபோல் 1925□இல் தொடங்கப்பட்ட இந்தியப் பொதுவுடைமைக் கட்சி தமிழ்நாடு விடுதலை அரசியலை முதன்மையாக முன்னெடுத்திடவில்லை.. தொடக்கத்தில், பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தன்னாட்சி அதிகாரம் அமைக்கப்படும் என்கிற முழக்கத்தை இடையிடையே வைத்திருந்தாலும் அதையும் சில காலத்தில் கைவிட்டு விட்டனர்..

தொடர்ந்த இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் மார்க்சிய இலெனினிய வழியினர்களும் தேச விடுதலைக் கருத்துகளையும் சாதி ஒழிப்புக் கருத்துகளையும் முதன்மை நிலையில் வலியுறுத்திடவில்லை..

இன்னொருபுறம்.. மறைமலை அடிகள் வழியில் பாவாணரைத் தொடர்ந்து, 1959□இல் தொடங்கப்பட்ட தென்மொழி இயக்கம் தமிழ்நாடு விடுதலை அரசியலை மிக வலுவாக எடுத்துப் பரப்பல் செய்துவந்தது.. அரசியல் வரலாற்றில் தமிழ்நாடு விடுதலையை வலியுறுத்தி மூன்று மாநாடுகளை நடத்தி இருந்தார் பாவலரேறு பெருஞ்சித்திரனார்..

அவர் முன்னெடுத்தத் தமிழ்நாட்டு விடுதலை அரசியல் திட்டம் என்பது, சாதி ஒழிப்பு, வகுப்பு (வர்க்க) ஒழிப்பு போன்றவை கருத்தாகக் கொண்டிருந்ததே அல்லாமல் அவற்றை இணைத்தத் திட்டமாக முன்மொழியப்படவில்லை..

இந்தக் கால நிலையில்... சிறைக்குள் இருந்த சூழலில் புலவர் கலியபெருமாள், தோழர் தமிழரசன் உள்ளிட்டோர் தேசிய இனங்களின் விடுதலை குறித்து நிறைய ஆய்வு செய்தனர்.. அந்த ஆய்வுக்கு அவர்களுக்குத் தூண்டலாகத் தமிழீழ விடுதலைப் போராட்டம் இருந்தது என்றால் தென்மொழி இயக்கத்தின் தமிழ்நாடு விடுதலை அரசியல் கருத்தளவில் துணையாக இருந்தது..

இந்த நிலையில்தான் சிறையில் இருந்து விடுதலையாகி வெளிவந்த புலவர் கலியபெருமாள், தோழர் தமிழரசன் உள்ளிட்டோர் பாவலரேறு பெருஞ்சித்திரனார், ஐயா ஆனைமுத்து, சாலை இளந்திரையன், எசு. என். நாகராசன், எசு. வி. இராசதுரை, வெங்காலூர் குணா உள்ளிட்ட பலரையும் சந்தித்துத் தமிழ்த் தேச அரசியல் விடுதலைக்கான முன்னெடுப்பை வலுவாக அறிவிக்கத் தொடங்கினர்..

1984 பெண்ணாடம் மாநாடு தமிழ்நாட்டு வரலாற்றில் ஒரு பெரிய திருப்புமுனைக்குரிய மாநாடாக அமைந்தது.. தொடர்ந்து அதே ஆண்டில் மீன்சுருட்டியில் நடைபெற்ற சாதி ஒழிப்புக் கருத்தரங்கமும் முதன்மை பெற்றது..

தமிழ்த் தேச விடுதலையையும், சாதி ஒழிப்பையும் வர்க்க ஒழிப்பையும் இணைத்த அரசியலை முன்வைத்து தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சி, வரலாற்றில் முதன் முதலில் தொடங்கப்பட்டது..

அதற்கான முன்னோடிகளாகப் புலவர் கலியபெருமாள், தோழர் தமிழரசன் உள்ளிட்ட பல தோழர்கள் இருந்தனர்..

அவர்களின் தலைமையில் இயங்கிய தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சி முன்னணியாகத் தமிழக மக்கள் விடுதலை முன்னணியையும் கட்டியது..

தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சியுடன் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையிலான உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், ஐயா ஆனைமுத்து அவர்களின் தலைமையிலான பெரியார் சமவுரிமைக் கழகம், சாலை இளந்திரையன் தலைமையிலான அறிவியக்கப் பேரவை, எசு என் நாகராசன் உள்ளிட்டவர்களின் பொறுப்பிலான மார்க்சிய இலெனினிய நடுவச் சீரமைப்புக் குழு ஆகியவற்றை இணைத்த முன்னணியாகவும் செயல்பட்டனர்..

அது செயல்படத் தொடங்கிய காலக்கட்டத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டம் வலுவாக நடந்து கொண்டிருந்த நேரம்..

எனவே, தமிழ்நாடு விடுதலைப் போராட்டத்தை வலுவாக முன்னெடுப்பதே தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு உண்மையான ஆதரவாக இருக்க முடியும் என்பதைத் தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சியும், தமிழக மக்கள் விடுதலை முன்னணியும் வலுவாக முன்னெடுத்துப் பரப்பல் செய்தது.. தமிழ்நாடு விடுதலைப் படையின்வழிச் சில தாக்குதல் நிகழ்வுகளும் நடத்தப்பட்டன..

இந்திய அமைதிப்படை எனும் பெயரில் அப்போது இலங்கைக்குச் சென்ற இந்திய வெறிப்படை செய்த அட்டூழியங்களைக் கண்டித்து மருதையாற்றுப் பாலம் குண்டு வெடிப்பு உள்ளிட்ட தீவிர நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன..

தமிழ்நாட்டுத் தேசிய அரசியல் வலுப்பட்டு வந்தது.. இந்தச் சூழலில் தோழர் தமிழரசன் உள்ளிட்ட தோழர்கள் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட கொடும் நிகழ்வுகள் நடந்தன.. இருந்தும் தமிழ்நாடு விடுதலைப் படையும், தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சியும் தொடர்ந்து இயங்கி வந்தது..

இன்றைய அளவில்.. குறிப்பாக 2009 முள்ளிவாய்க்கால் பேரிழப்புக்குப் பிறகு தமிழ்த் தேசிய அரசியலில் பல குழப்பங்கள் உருவாக்கப்பட்டன..

தமிழ் ஈழத் தேசியத்திற்கான முயற்சி என்பது ஒன்றாகவும், தமிழ்நாட்டுத் தேசியத்திற்கான முயற்சி மற்றொன்றாகவும் கருதப்படாமல் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்துக் குழப்பிக் கொண்டதும்..

தமிழீழத் தேச விடுதலையே தமிழ்நாட்டுத் தமிழர்களின் கடமை போலவும் பல இயக்கங்களாலும் கருதப்படவும் பரப்பப்படவும் செய்யப்பட்டன..

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கக் கூடியவர்கள் தமிழ்ஈழத் தேசிய இனத்தைச் சார்ந்தவர்களே..

தமிழ்நாட்டு விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கக் கூடியவர்கள் தமிழ்நாட்டைச் சார்ந்த தமிழ்த் தேசிய இனத்தவர்களே..

இவர்கள் ஒவ்வொருவரும் மற்ற தேசிய இனத்திற்கு ஆதரவாளர்களேயன்றி அதற்காகப் போராட வேண்டியவர்களாக இருக்க இயலாது..

அதாவது..

தமிழ் ஈழத்தின் விடுதலைப் போராட்டத்திற்குத் தமிழ்நாட்டுத் தமிழர்கள் ஆதரவாளர்களே அன்றி.. அவர்களே போராட்டக்காரர்களாக இருக்க முடியாது..

எப்படித் தமிழ்நாட்டின் தேசிய விடுதலைக்குத் தமிழ் ஈழத் தமிழர்கள் போராட்டக்காரர்களாக இருக்க முடியாதோ அப்படியே தமிழ் ஈழத் தேசியத்தின் விடுதலைக்குத் தமிழ்நாட்டு தமிழர்கள் போராட்டக்காரர்களாக இருக்க முடியாது..

இந்த அரசியலின் புரிதலின்மையே..

தமிழீழத்தின் விடுதலையைச் சொல்லிச் சொல்லி.. அதுவே தங்களின் விடுதலைப் போராட்ட இலக்கு போல பேசி பேசி.. தமிழ்நாட்டில் மயக்குபவர்களும் மயங்குபவர்களும் இருக்கின்றனர்..

இத்தகைய குழப்பங்களிலிருந்து விடுபட தமிழ்நாட்டுத் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க நமக்குப் புலவர் கலியபெருமாள், தோழர் தமிழரசன் உள்ளிட்டோர் தேவைப்படுகின்றனர்..

அந்த வகையில் புலவர் கலியபெருமான் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வுவழி அவர்களின் அரசியலைப் பயில்வோம்.. முன்னெடுப்போம்!

# திராவிடம்.. திராவிடர்..


பொழிலன்

தமிழைத் தமிழ் என்றும் அதன் மொழிகளையே திராவிடம் என்றும் பிரித்துக் கூறல் வேண்டும் எனப் பாவாணர் (தமிழர் வரலாறு, பக்கம் 28) அவர்கள் விளக்கப்படுத்தியதையும், தமிழையே பிற நாட்டினர் பல வடிவங்களில் மாற்றிப் பலுக்கினர் (உச்சரித்தனர்) என அறிய வேண்டி இருப்பதாகவும் உணர்ந்தோம்..

தமிழே பல வகையில் வந்தேறியத் தாக்கங்களாலும் வடபால் பகுதிகளில் தமிழிய அரசு கோலோச்சாததாலும் திரிபுற்றது என்றும் கண்டோம்..


அவ்வகையில் திரிபுற்ற மொழிகள் 45 க்கும் மேற்பட்டவை. அவை **வடபால் திராவிட மொழிகள், நடுத் திராவிட மொழிகள், தென் திராவிட மொழிகள்** எனக் குறிக்கப்பட்டுப் பாவாணர் உள்ளிட்ட மொழியியல் அறிஞர்களால் பட்டியலிடப்படிருக்கின்றன..

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலியின் முகப்புரைகளுள் அப் பட்டியல் விரிவாக இருப்பது அனைவரும் அறியத்தக்கது..



திரவிட மொழிகள்

| வரிசை எண் (1) | மொழி (2) | | பேசப்படும் மாநிலம் (3) | பேசுவோர் எண்ணிக்கை 1961-ல் (4) | 1971-ல் (5) |
|---|---|---|---|---|---|
| | தென்திரவிடம் (South Dravidian Group) | | | | |
| 1. | தமிழ் | Tamil | தமிழ்நாடு கருநாடகம் கேரளம் | 30,465,442 | 37,690,106 |
| 2. | மலையாளம் | Malayalam | கேரளம் தமிழ்நாடு கருநாடகம் | 16,994,919 | 21,938,766 |
| 3. | கன்னடம் | Kannada | கருநாடகம் தமிழ்நாடு மராட்டியம் | 17,305,629 | 21,710,649 |
| 4. | தெலுங்கு | Telugu | ஆந்திரம் தமிழ்நாடு கருநாடகம் | 37,642,439 | 44,756,923 |
| 5. | இருளம் | Irula/Irulinga | தமிழ்நாடு | 4,124 | 5,300 |
| 6. | எருகலா | Yerukala / Yerkula | ஆந்திரம் | 73,975 | 67,552 |
| 7. | எரவம் | Yerava | கருநாடகம் | 14,927 | 10,867 |
| 8. | குடகு | Coorgi / Kadagu | கருநாடகம் | 79,172 | 72,085 |
| 9. | குரும்பர் | Kurumba / Kurumbar | கருநாடகம் தமிழ்நாடு மராட்டியம் | 8,798 | 7,903 |
| 10. | குறவர் | Korava | கருநாடகம் ஆந்திரம் | 5,792 | --- |
| 11. | கைக்கடி | Kaikadi | மராட்டியம் | 8,456 | 11,846 |
| 12. | கொரகர் | Koraga | கருநாடகம் | 192 | --- |
| $ 13. | கொரச்சர் | Koracha | கருநாடகம் | 3,467 | --- |
| 14. | கோதம் | Kota | தமிழ்நாடு | 862 | --- |
| $ 15. | சதப்பு | Jatapu | ஆந்திரம் | 19,467 | --- |
| 16. | தோடம் | Toda | தமிழ்நாடு | 765 | --- |
| 17. | துளுவம் | Tulu | கருநாடகம் கேரளம் | 934,849 | 1,158,419 |
| 18. | படகம் | Badaga | தமிழ்நாடு | 85,463 | 104,919 |
| ★19. | பெளரி | Belari | --- | --- | --- |
| $ 20. | வடாரி | Vadari | மராட்டியம் கருநாடகம் ஆந்திரம் | 20,654 | 35,900 |



| வரிசை எண் (1) | மொழி (2) | | பேசப்படும் மாநிலம் (3) | பேசுவோர் எண்ணிக்கை 1961-ல் (4) | 1971-ல் (5) |
|---|---|---|---|---|---|
| | நடுவண் திரவிடம் (Central Dravidian Group) | | | | |
| 21. | கோண்டி | Gondi | மத்தியப்பிரதேசம் மராட்டியம் ஒரிசா | 1,383,321 | 1,688,284 |
| $ 22. | கந்தம் | Khond / Kondh | ஒரிசா ஆந்திரம் | 168,027 | 196,316 |
| $ 23. | கிசன் | Kisan | ஒரிசா அசாம் | 50,378 | 73,847 |
| 24. | குய் | Kui | | | |
| 25. | குவி | Kuvi | ஒரிசா | 310,907 | 351,017 |
| 26. | கொண்டா | Konda | ஒரிசா மத்தியப்பிரதேசம் | 12,298 | 33,720 |
| 27. | கொலாமி -நாய்கி | Kolami Naiki | மராட்டியம், மேற்கு வங்காளம் | 46,065 | 66,868 |
| $ 28. | கோயா | Koya | ஆந்திரம், ஒரிசா | 140,776 | 211,877 |
| $ 29. | துருவா | Dhurwa | மத்தியப்பிரதேசம் | 24,641 | 29,376 |
| $ 30. | தோர்லி | Dorli | மத்தியப்பிரதேசம் | 35,455 | 24,320 |
| $ 31. | மரியா | Maria | மராட்டியம் மத்தியப்பிரதேசம் அசாம் | 65,371 | 78,495 |
| 32. | பர்ஜி | Parji | ஒரிசா | 84,607 | 73,912 |
| $ 33. | பர்ஜி-கோண்டி | Parsi-Gondi | மத்தியப்பிரதேசம் | 14,990 | 15,463 |
| 34. | பெங்கோ | Pengo | ஒரிசா | 1,254 | --- |
| ★35. | மண்டா | Manda | --- | --- | --- |
| | வட திரவிடம் (North Dravidian Group) | | | | |
| 36. | குருக்கம் (ஒராவன்) | Kurukh (Oraon) | பீகார் மேற்கு வங்காளம் | 1,132,931 | 1,235,665 |
| $ 37. | தங்கரி | Dhangri | மத்தியப்பிரதேசம் மேற்கு வங்காளம் உத்திரப்பிரதேசம் | 4,377 | 5,492 |
| $ 38. | நகேசியம் | Nagesia | மேற்கு வங்காளம் | 1,484 | --- |
| 39. | மாலத்தம் | Malto (Rajmahal) | பீகார் | 88,645 | --- |
| 40. | பிராகுவி | Brahui | பாகித்தானம் | 48,589 (1901, குடிமதிப்பின்படி) | |

$ இக் குறி இடப்பட்டவை இந்தியக் குடிமதிப்பு (Census) அறிக்கையில் திரவிடமொழிகளாகக் குறிக்கப்பட்டவை. [illegible]

★ டி.இ.டி (D.E.D.) [illegible]

இந்நிலையில் தமிழ் மொழியையே பிற மொழியினர் தமிழ் என்று பலுக்க (உச்சரிக்க) இயலாமல் திரித்து வழங்கியதையும், வழங்கி வருவதையும் அறிய வேண்டும்.. வடமொழி நூல்கள் சிலவற்றுள் தமிழைத் **'த்ராவிடி'** என்று குறித்துள்ளதும், பாகவதபுராணம் எனும் சமசுக்கிருத நூலுள் 'சத்திய வீரன்' எனும் ஆரிய எதிர்ப்பு அரசனைத் **'திராவிடபதி'** என்பதாகக் குறிப்பிட்டதும்,

கி.பி. 470இல் பழந் தமிழ்நாட்டில் களப்பாளர்கள் ஆட்சியில் இருந்த போது வச்சிரநந்தி' என்பார் அமைத்த சமணரின் தமிழ்க் கழகம், **திரமிள சங்கம்** என்பதாக அழைக்கப்பட்டதும்,

பெரிய திருமொழிச் சிறப்புப் பாயிரத்தின் உரையில் (500 ஆண்டுகளுக்கு முந்தையது) பிள்ளை லோகாச்ய சீயர் என்பார் தமிழிலக்கணத்தை **'திராவிட சாஸ்திரம்'** எனக் குறிப்பிட்டதும், நாலாயிரம் தெய்வப் பனுவலில் **'திராவிட வேதம்'** என்பதாகக் கூறப்பட்டதும்,

தாயுமானவரின் (18ஆம் நூற்றாண்டு) பாடல்களில் தமிழ் என்பதையே **திராவிடம்** எனச் சுட்டி எழுதியதும்,

சிவஞான முனிவரின் (18ஆம் நூற்றாண்டு) மெய்கண்டான் நூல் அகலவுரையில் **திராவிட மாபாடியம்'** எனக்குறிப்பிடப்பட்டதும்,

சபாபதி தமிழிலக்கிய வரலாற்றில், **திராவிடப் பிரகாசிகை** என்றழைக்கப்பட்டதும், **'திராவிடம்'** என்கிற சொல் புழக்கத்திற்கான பதிவுகளாகும்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர்த் தெலுங்கு, கன்னட பிற தமிழிய மொழிகள் எவையும் இலக்கிய வளர்ச்சியிலும் இல்லை; தோன்றவும் இல்லை.

எனவே, அதற்குப் பிந்தைய காலங்களில் தோன்றிய அம் மொழிகளின் இலக்கியங்கள் மிகச் சிலவற்றுள்ளேயே **'திராவிடம்'** என்கிற பதிவுகள் உண்டு.

கி.பி.7ஆம் நூற்றாண்டின் குமரிலபட்டர் என்பார் தெலுங்கு மொழியை **'ஆந்திர திராவிட பாஷை'** என்றே அழைக்கலானார். ஆயினும் இம் மேற்கண்ட பதிவுகள் யாவும் சமயச் சார்புடைய செய்திகளுடனான பதிவுகளாகவும், ஆரியச் சார்பு இலக்கியப் பதிவுகளாகவுமே இருப்பதை நன்கு அறிய முடியும்.

தம் தாய்மொழியைத் தனிமைப்படுத்திக் காட்டிக் கொள்ளவும் வேத மொழியைத் 'தேவ பாஷை' எனப் புகழ்ந்து கொண்ட ஆரிய சமசுக்கிருதமே 'தமிழைத்' **திரமிள்** என்றும் **த்ரமிட்** என்றும் அழைத்ததை அறியவேண்டும்.

எனவே, சமசுக்கிருத மொழி வழக்காற்றுப்படியே தமிழ், த்ரமிள் என்று அழைக்கப் பெற்றதாக உணரமுடிகிறது.

தமிழைப் பிற வெளிநாட்டினர் எவரும் 'தமிழ்' என்றே அழைத்து விடாததையும் நாம் இவ்விடத்தில் ஒப்புநோக்குவது நல்லது.

கி.மு. முதல் நூற்றாண்டின் பெரிப்பூலசு என்பாரின் கிரேக்க நூலில் தமிழரைத் **தமிராய்** என்றும்,

கி.மு. முதல் நூற்றாண்டைச் சார்ந்த சமய வங்கா எனும் சமண நூலில் பதிவாகியுள்ள அக்கால மொழிகள் குறித்த பட்டியலில் தமிழ், **தமிழி** என்றே பதிவாக்கப்பட்டிருப்பதையும்,

பியூத்தியசு எனும் உரோமர்களின் உலகப் படத்தில் தாலமி இரேவண்ணா எனும் எகிபதியர்கள் (கி.பி.139161) தமிழரை **தமிரிக்கே** என்றும்,

கி.பி. 6ஆம் நூற்றாண்டில் வராகமிகிரர் நூல் பழம்படியில் தமிழ், **த்ரமிட** என்றும்,

ஏழாம் நூற்றாண்டில் தமிழகம் வந்த சீனப் பயணியான யுவான் சுவாங் தமிழைத் **திமில** என்றும்,

மகாவம்சம் எனும் இலங்கை வரலாற்று நூலுள் தமிழ், **த்மிலோ** என்றும், (வடநாட்டின்) மங்களேச அரசனின் பட்டயங்களில் தமிழ், **த்ரமில** என்றும்,

இந்தியாவில் புத்த மதத்தைப் பரப்பின வரலாறு' எனும் தாரநாதன் (திபெத் கி.பி. 1573) நூலுள் தமிழர், **த்ரமிலர்** என்றும்,

ஐரோப்பியர்கள் **தமுல்** என்பதாகவும், தானிசு **தமுலிக்க** மொழி என்பதாகவும்,

ஆங்கிலேயர் **டமில்** என்பதாகவும்

செர்மானியர் (மாக்சுமுல்லர்) **தமுலிக்**

என்பதாகவுமே, தமிழைக் குறிப்பதை ஆழ்ந்து கண்ணுறலாம். ஆக, இத்தகைய பின்னணியிலேயே திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எழுதிய அறிஞர் கால்டுவெல் திராவிடம்' என்கிற சொல் வழக்காற்றையே பயன்படுத்த நேர்ந்தது.

எனவேதான், மொழியறிஞர் பாவாணர்

'கால்டுவெல் தமிழை ஆழ்ந்து கற்றுத் தமிழுக்கு அரும்பெருந் தொண்டு செய்த மேலையருள் தலைசிறந்தவராய் இருந்தும், தம் ஒப்பிலக்கணத்தில் சிலவிடங்களில் மிகத் தவறான செய்திகளைக் கூறியுள்ளார்' ' என்பதாகக் குறிப்பிட நேர்ந்தது.

**இந்த வகையில், தமிழையே திரமிளமாக, திராவிடமாகப் பிற மொழியினர்கள் அடையாளப்படுத்தியது ஒரு நிலை எனில்,**

**தமிழிலிருந்து பிரிந்து திரிந்த மொழிகளை இணைத்துச் சொல்வதற்குத் திராவிடம் எனப் பயன்படுத்தியது இன்னொரு நிலையாக இருக்கிறது..**

இந்த இரு நிலைகளின் உருவாக்கங்களையும் விளங்கிக் கொண்ட வகையிலேயே சில தெளிவுக்கு நாம் வர வேண்டியுள்ளது..

தமிழை டமுல், டாமில் என்றெல்லாம் ஐரோப்பிய நாடுகளில் சொல்கின்றனர் என்பதற்காகத் தமிழை டமுல், டாமில் என்றெல்லாம் தமிழர்கள் அடையாளப்படுத்திக் கொள்ள இயலாது... அப்படி அடையாளப்படுத்திக் கொள்ளவும் முடியாது..

ஒரு பெரும் அவலம் என்னவென்றால், தங்களைத் தமிழர்கள் என்று பதிந்து கொள்ளுகிற அரசியல் உரிமையை இந்திய அரசு அதிகாரத்தால் இழந்து நிற்கிறோம்..

அதாவது அரசுப் பதிவுகள் எவற்றிலும் தமிழர்கள் தங்களைத் தமிழர்கள் என்று பதிவு செய்து கொள்ள இயலாத நிலைக்கு ஆட்பட்டிருக்கிறோம்.

இந்த நிலை ஏன் உருவானது என்றும் எப்படி இந்த நிலையை மாற்றுவது என்றும் அறிய வேண்டியுள்ளது..

அவை குறித்து அறியும் நிலையிலேயே திராவிடம், திராவிடர் என யாரை அடையாளப்படுத்துகிறோம் என்றும், எங்கு அடையாளப்படுத்துகிறோம் என்றும்.. அவ்வாறு அடையாளப்படுத்துவது எந்தளவிற்குப் பயனானது அல்லது தவறானது என்பது குறித்தும் மேலும் விரிவாக சிலவற்றைப் பார்க்கலாம்..

(தொடரும்)

வெளியீட்டுக் குழு : பொழிலன், பேரா. த. செயராமன், முத்தமிழ், கண, குறிஞ்சி, நிலவழகன், பாவெல்

**தமிழ்நாடு** (மாத இதழ்) 4/197 பல்லவன் நகர், 3 ஆவது தெரு, மேடவாக்கம், சென்னை 600100 கைப்பேசி 97108 75283, 91713 78874

மின்னஞ்சல் : thamizhnadu2051@gmail.com

அச்சிட்டோர் : முகாம்பிகை அச்சகம், 24, வாணியர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600005